# பாலியர்  நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௫ ௵. சித்திரை ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை, ௪.

## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | சி. | ௧. |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௯ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## Subscriptions and Donations.

| | s. | d. |
|---|---|---|
| 1864. | | |
| Manepay, Y. C. A. - - | 6 | 0 |
| 1865. | | |
| Mr. R. P. C. Murugasapilly | 1 | 6 |
| " A. Arumugar Maistry - | 1 | 6 |
| " தி. கிருஸ்னசாமி ஒவசீயர் - | 1 | 6 |
| " பெ. சுப்பிராயபிள்ளை - | 1 | 6 |
| " A. N. M. இவுருகீம், Notary | 1 | 6 |

## அறிவித்தல்.

இந்தமாதம் ௰௬ந் திகதி ௰ மணியளவில் உடுவில் தேவாலயத்தில் சகல இளைஞர் கிறிஸ்தசங்கத்தின் இரண்டாம் வருஷாந்தரக்கூட்டம்வைக்கப்படும். அந்தருணத்தில் அச்சங்கத்தின் அனுசாரிகள் அனைவரையும் அழைக்கிறோம். கூட்டம்முடிவில் பணஞ்சேர்க்கப்படும்.

## இரண்டு வெள்ளிப்பணங்கள்.

இரண்டு பிள்ளைகள் விளையாடிப் பொழுதுபோக்கும்படி அந்திநேரத்தில் ஒரு காட்டுக்கருகே வந்துநிற்கையில் ஒரு சோடு சப்பாத்தைக் காட்டின் ஓரத்திற் கண்டு இதையுடையவனை அலைக்களித்துக் கேலிபண்ணுவோம் வாவென்று ஒருவன் சொல்ல, மற்றவன் சரிதான் நீ சொன்னபடி செய்ய எனக்குப் பிரியம். பகிடி பரிகாசம்பண்ணுதல் நல்லதாகவிருந்தாலும் இது காரியத்தில் நான் சம்மதிக்கக் கூடாது. ஒருவேளை இந்தச் சப்பாத்தையுடையவன் மிகவுந் தரித்திரனாகவிருக்கக்கூடும். அவன் தனக்கு வேண்டிய விறகை வெட்டும்படி காட்டுக்குள் புகுந்திருக்கிறான். நாங்கள் இதைப்பற்றித் தொந்தரவுப்பட வேண்டியதில்லை. நீ சொல்லிய பகிடிபரிகாசத்திலும் இருமடங்கான பகிடிபரிகாசம்பண்ணுவோம் வா என்று சொல்லி உன்னிடத்திலும் என்னிடத்திலுமுள்ள வெள்ளிப்பணங்களிரண்டையும் இந்த இரண்டு சப்பாத்துக்குள் வைத்து பக்கத்திலிருக்கும் வைக்கோற்பட்டடைக்கருகே மறைந்து இருந்துகொண்டு கிழவன் சொல்வதைக் கேட்போம் வாவென்றான். அதற்கு மற்றவனுமிசைந்து தங்கள் வெள்ளிக் காசுகளை சப்பாத்துக்குள்வைத்து மறைந்திருந்துகொண்டு கிழவன் வருகிறதோ என்று அடிக்கடி எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கையில் காட்டுக்குள்ளிருக்கும் இலை குழைகளின் சரசரப்பைக் கேட்டு செவ்வையாகப் பதுங்கிக்கிடந்துகொண்டு கிழவன்செய்வதைக் காணும்படி அடிக்கடி தலைநிமிர்த்திப்பார்த்தார்கள். அப்பொழுது இளைத்தவையும் சவித்தாலும் தழர்ந்தநடையும் கூனல்முதுகும் பஞ்சப் பெட்டிபோற்றலையும் முதலில் விறகுகட்டோடாகக் கிழவன் வெளியேறிச் சற்று ஆறம்படியாக நிற்கையில் தனது சப்பாத்திரண்டுக்குள்ளும் இரண்டுவெள்ளிப்பணங்களைக்கண்டு உடனே முழந்தாட்படியிட்டு தன் கைகளை உயர்த்தி தேவனே உமது திருநாமம் புகழப்படத்தக்கதென்று செபம்பண்ணினதை வைக்கோற்பட்டடையின் பின் மறைந்திருந்த இருபிள்ளைகளுங் கேட்டுகொண்டிருந்தார்கள். இன்னும் அவ்வேளையில் கிழவன் தனது பிள்ளைகளொவ்வொன்றாக இளைத்ததையும் தான் அனுபவித்த துக்கதுயரங்களையும் தன்மனைவியின் சஞ்சலங்களையும் விரிவாகச்செபத்திற்சொன்னதையுங் கேட்டதுமன்றி இந்தப்பணங்களைத் தனது சப்பாத்துக்குள்வைத்த கைகளையும் ஆசிர்வதிக்கவேண்டுமென்று பிரார்த்தித்ததையுங்கேட்டார்கள். அப்பொழுது அந்தப்பிள்ளைகளிருவரும் இனிமேல் நாங்கள் எவரையும் கேலி சரசம்பண்ணாதபடிக்கு இக்காரியத்தால் நற்புத்தியடைந்தோமென்று சொல்லிக்கொண்டு தங்கள்பாட்டில் வீட்டுக்குப்போய்விட்டார்கள். கிழவனுமோ மனமகிழ்ச்சியுடன் தடதடவென்று தன்வீடு போய்ச்சேர்ந்தார்.

படிப்பனை.—ஒருக்காலும் ஒருவருக்கும் இடர்செய்யாதே. உன் இருதயத்திலுள்ள நியமித்தனைகளை அகற்றிவிடு. பகிடிபரிகாசங்களில் எப்பொழுதும் உனது பட்சத்தையும் அன்பையுங்காட்டு. உன்மனோதுக்கத்தில் தேவனைநோக்கிப் பிரார்த்தி. அவர் உனக்குப் பலனளிப்பார்.

## சத்துருவை நேசி.

தன திரவியஞ் சம்பாதித்த வயோதிபனொருவனிருந்தான். அவன் தன் சம்பாத்தியம் எல்லாவற்றையும் தனக்குள்ள மூன்று புத்திரருக்குஞ் சரிவரப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தான். ஆனால் அவனிடத்தில் மிகவும் விலையுயர்ந்த ஒரு இரத்தினக் கல்லுண்டு. மூன்று மாதத்துக்குள் தனது மூன்று புத்திரரில் எவன் அதி காத்திரங்கொண்டதும் அதி உச்சிதமான தயானத்தையுஞ் செய்கிறானோ அவனுக்கே அது கொடுக்கப்படுமென்று சொன்னான். குறித்த காலம் நிறைவேறினபின் மூன்று புத்திரரும் விருத்தனாகிய பிதாவுக்கு தாங்கள் செய்த காரியங்களைச் சொல்லி உபகாரத்தைப் பெறும்படி வந்து நின்றார்கள்.

மூத்தவன் சொன்னது பிதாவே, உமது வீட்டை விட்டு நான் புறப்பட்டதின்மேல் ஒருபொழுதும் அறியாத ஒரு அந்நியன் என் வசத்தில் தனதுகைரொக்கப்பணம்எல்லாவற்றையும் ஒப்பித்து யாதொரு கைக்கணக்காகுதல் அல்லது கறுக்காகுதல் அல்லது என் கைபொப்பமாகுதல் என்னிடத்தில் வாங்கவில்லை. மறுபடி அவன் என்னிடத்திற் தனது பணத்தைக்கேட்டபொழுது யாதொரு அட்டியில்லாமல் கொடுத்துவிட்டேன். இதில் நான் புகழப்படத்தக்கவனல்லவோ? என்று சொல்ல, விருத்தனாகிய பிதா அவனை நோக்கி, மெய்தான் மகனே, நீ உனது கடமையைச் செய்தாயேயன்றி வேறென்ன செய்தாய்? நீ செய்தது நீதியேயன்றி தயாளமல்லவேயென்றான்.

இரண்டாம் புத்திரன் சொன்னது குளத்துக்குள் விழுந்து இறந்துபோக ஏதுவாகவிருந்த ஒரு பிள்ளையை நான் விழுந்து தூக்கி இரட்சித்தேன். அந்நேரத்தில் என்னுயிரையும் நான் ஒருபொருளாக எண்ணவில்லை. நான் சொல்வது சத்தியமென்பதைக் குறித்து விசாரித்தால் தெரியுமென்று சொல்ல, சரி நற்செய்கை செய்தாய் மகனே, ஆனால் இது அதி உச்சித செய்கையல்லவே; நீ செய்தது மனிதன் மனுஷத்தன்மையாகச் செய்யவேண்டியதையே செய்தாயென்றான்.

மூன்றாம் புத்திரன் சொன்னது எனது பிராண சத்துருவாகிய ஒருவன் செங்குத்தின் ஓரத்தில் கன நித்திரைமயக்கமாக நித்திரையாகக் கிடந்தான். அவனிற்றொட்டவுடன் புரண்டுபோய் பாதாளத்தில் விழுந்து சின்னாபின்னமாக நொருங்கிப்போவான். நான் மிகுந்த கவலையுடன் அவனைத் தட்டியெழுப்பி அவன் உயிரைத் தப்பவைத்தேன் என்றான்.

அப்பொழுது பிதா அவனைக் கட்டியணைத்து என் மகனே இரத்தினம் உனக்கே உடையதென்றான்.

இச்செய்கைகள் இரட்சகருடைய போதனைக்கொத்தது. "உங்கள் சத்துருக்களை நேசியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள், உங்களை நிந்தித்து, உங்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் நிமித்தம் வேண்டுதல் பண்ணுங்கள்." என்னும் வாக்குகளின்படி செய்வோர் உத்தம கிறிஸ்தவர்களேயன்றி வேறார்?

பிள்ளைகளே "தனக்கொருவன்வெம்பாவிற்றுன்கருப்பஞ்சாறுய் மனத்துள்ளேவேகமடக்கி நினைத்திருந்து தாழ்ந்தலைமேலேகொள்வாரந்தானினைந்த காலம்வருமளவுங்கண்டு" என்னும் மனுஷருடைய வாக்குக்குந் தேவவாக்குக்குமுள்ள பெரும் வித்தியாசத்தைப் பாருங்கள். எது உச்சித செய்கை? சத்துருவை நேசித்தலோ? பகைத்தலோ? ஆகையாற் கிறிஸ்துவினிடத்திற் கற்றுக்கொள்ள வகைபாருங்கள்.

## உலோகங்கள்.

நமது தேசத்தார் உலோகம் ஐந்தென்றும் எழென்றுஞ் சொல்லுவார்கள். அவையாவன, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பவைகளைப் பஞ்சலோகமென்றும், வெண்கலம், தரா என்பவைகளைச் சேர்த்து சத்தலோகம் என்றுஞ் சொல்லுவார்கள். ஆனால் உலோகங்கள் ஆறு; அவையாவன, பொன், வெள்ளி, செம்பு தகரம், ஈயம், இரும்பு என்பவைகளே. பொன் மிகவும் கனமுள்ளதும் அதி விலையுள்ள

துமாயிருக்கின்றது. அதினால் நாணயங்களையும் ஆபரணங்களையுஞ் செய்வார்கள்; அரந்கடுத்தாப்போல விலையுள்ளது வெள்ளி; இதுவும் மேற்சொல்லிய பாவிப்புக்களுக்கே உதவும். செம்பு செந்நிறமுள்ளது; அதைத் தண்ணீரிற்போட்டால் பச்சினமான களிம்பு தோன்றும். இதுவே நஞ்சு. ஈயம் மெதுவானதும் லேசுவாக உருகக்கூடியதுமான உலோகம். தகரம் அதிலேசானது. தகரம் பூசப்பட்ட இரும்புத்தகடுகளை இதினாலுண்டுபண்ணுவார்கள். இரும்பு மிக இறுக்கமுள்ளதும் பிரயோசனமுள்ளதுமாயிருக்கின்றது. இதை மிகவுஞ் சிவப்பெழும்பக் காய்ச்சி குளிர்ந்த சலத்தில் தோய்த்தால் உருக்காகும். மேற்சொல்லிய உலோகங்கள் பூமிக்குள்ளிருந்து கிண்டியெடுப்பார்கள். அவைகளைக் கிண்டியெடுக்குமிடத்துக்கு சுரங்கமென்று பேர்.

## யெருஷலேம்.

இது யூதஇராச்சியத்தின் இராசதானி. எத்தேசத்திலும் நடந்த சம்பவங்களிலும் அதிசிரேஷ்டமானதும் அபூருவமானதுமான சம்பவங்கள் இப்பட்டணத்தில் நடந்திருக்கிறது. இத்தேசத்திற் சம்பவித்தவைகளைப் பற்றித் தேவதூதரும் மனுஷரும் அதிஇன்பத்தை உடையவர்களாக விரும்பதுமன்றி இருக்கக் கடமைப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். இதுவே சருவவல்லதேவன் தாம் வாசம்பண்ணும்படி தெரிந்துகொண்டஇடம். இவ்விடத்திற்றான் அவருடைய மகிமை வெளிப்படையாய் பிரசன்னமானது. இதுவே "பூரணசௌந்தரியமுள்ள"தும் "சகல தேசங்களிலும் மகிமையுள்ளதேசமு"மானது. தாவீதிராசனும் தனது சுரமண்டலக்கருவியால் யெகோவாவைத் துதித்துப்பாடின நகரமிதுவே. பன்னிருகோத்திரமும் யெகோவாவை ஒருமித்துவழிபடும்படி ஏறுவாக்கினநகரமுமிதுவே. இவ்விடத்திலேதான் தீர்க்கதரிசிகள் மறுலோகத்தைப்பத்திய தரிசனங்களைக் கண்டார்கள். குற்றவாளியாகியமனுஷசாதிக்கு விடுவிக்கவேண்டியவிசேஷங்களை அவர்கள்பெற்றார்கள். இவ்விடத்திலேயே எங்கள் ஆண்டவரும் இரட்சகரும் நம்மைப் பாவத்தில் நின்றும் நித்தியநரகயாதனையில் நின்றும் நீக்கும்படி ஒரு ஊழியக்காரனின் வடிவாக அவதரித்து கெட்டியேர்ப்பெறிந்து அழுது மரணத்துக்குத் தமது ஆற்றுமாவை ஒப்புக்கொடுத்தார். யெகோவா தாம் தெரிந்துகொண்ட சனத்தின்மேல் தமது உக்கிரகோபத்தை ஊற்றித் தமது சுதந்தரமான சனத்தைப் பாழாக்கின தேசமுமிதுவே.

யெருஷலேம் ஒருகாலத்தில் சாலேம் என்னும்பெயருள்ளதென்றெண்ணுகிறார்கள். (ஆதி. ௰௪: ௰௮. எபி. ௭: ௧—௨.) ஆபிரகாமின் நாட்களில் இதில் மெல்க்கிசேதேக்கு வாசம்பண்ணினார். வாக்குத்தத்தமான தேசத்தை இஸ்ரவேலர் பிடித்தகாலத்தில் யெபூசியர் இந்த ஆரணநகரத்தைக் கையாட்சிபண்ணினார்கள். அவர்களாலே யெபூசு என்னும் பெயர்பெற்றது. யெபூசு என்ற வார்த்தையும் சாலேம் என்ற வார்த்தையுஞ் சேர்ந்து சில விகாரம்பெற்ற உச்சரிப்புக்குச் சுகமாக யெருஷலேம் என்ற தற்காலப் பெயருண்டாயிற்றென்று எண்ண இடமுண்டு.

(இன்னும்வரும்.)

## ஒருபிள்ளையின் அன்பு.

சாறு ஐந்து வயதுள்ள ஒரு சிறுபெண் புதியேற்பாட்டில் சில அதிகாரங்களை வாசித்துவருகையில் "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு, மனுபுத்திரனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை" என்ற வசனத்தை வாசித்தபொழுது அவள் கண்கள் கலங்கி நெஞ்சு படபடத்து பெருங்குரலிட்டழுதாள். அப்பொழுது மாதா, பிள்ளையே, காரியம் என்னவென்று விசாரிக்க, அவள் நெடுநேரம் ஒன்றும் பேசாதிருந்தாள். அவளுடைய விம்மல் பொருமல் தீர்ந்தவுடன் ஆச்சி நான் அப்பொழுதிருப்பேனாகில் என்தலையணையை அவருக்குக் கொடுப்பேனேயென்று சொன்னாள்.



கரடி.

சென்றசங்கியையிற் கரடியைப்பற்றிச் சிலகாரியங்கள் சொன்னோம். இப்பொழுதுஞ் சிலகாரியங்கள்சொல்லுவோம். பூமியின் மூலைகளில் வசிக்குங்கரடி வெண்ணிறமானது. அவ்வகையிலுள்ள பெண்கரடி மிக முரண்டுங் காட்டுத்தனமுமுள்ளது. ஆகிலும் தனது குட்டிகளை மிகுந்த கரிசனையுடன் காப்பாற்றும். இதைப்பற்றிய சில திருஷ்டாந்தங்களுண்டு. பனிக்கட்டியின்மேலாக சிலர் இரண்டு குட்டிகளையும் ஒரு தாயையும் பின்தொடர்ந்து துரத்திக் கிட்டினசமையத்தில் தாய்க்கரடியானது தனது குட்டிகளைச் சத்துராதி சுட்டுக்கொன்றுபோடாதபடி அவைகளை முன்னே ஓடச்செய்து தான் பின்னே போனது. தாய்க்கரடியின் விருப்பத்தின்படி அவைகள் சவலையாகவிருந்ததினால் அதிதுரிதமாக ஓடாததைக்கண்டு, ஒரு குட்டியின் வயிற்றின்கீழ் தனது மூஞ்சையைவைத்து தன்னாற் கூடியளவு பெலன்கொண்டு தூக்கி அதிதூரத்துக்குப் போகும்படி எறிந்தது. மறுபடி திரும்பி மற்றக்குட்டியையுந் தூக்கி முன்சொன்னபிரகாரம் எறிந்தது. மாறிமாறி இப்படியே வேட்டைக்காரர் அவைகளைச் சுடாதபடி தூக்கிஎறிந்து அதிதூரத்துக்குக் கொண்டுபோனது. இவ்வகையாகத் தன் குட்டிகளைக் காப்பாற்றி உயிர்தப்பும்படி செய்தது.

வடமுனைக்குப் பிரயாணம்பண்ணின கப்பித்தான் பிப்பிஸ் (Captain Phippis) என்பவர் தான்கண்ட காரியத்தைக்குறித்து எழுதியிருக்கிறதாவது, ஒருநாட் காலமே பாய்மரத்தின் நுனியிலிருந்த ஒருவன் மூன்று கரடிகள் பனிக்கட்டியின்மேல் நடந்து கப்பலைக் கிட்டிவருகிறதாகச் சொன்னான். அக்கரடிகள் இவ்வழியை நோக்கிவரவேண்டிய முகாந்தரமென்னவெனில், கடற்குதிரைமீனொன்றை(Sea-horse) அவர்கள் சுட்டுக்கொண்டிருக்கையில் அதின் கொழுப்பு மிகுதூரத்துக்கு வாசித்ததால் அந்த மணத்தை நோக்கியே அவைகள் நடந்துவந்தன. இரண்டு குட்டிக் கரடிகளும் ஒரு தாயும் வரக்கண்டார்கள். ஏறக்குறையத் தாயளவு உயரம் பருமமுள்ளவைகளாகக் குட்டிகளுந்தோற்றின. மிகுந்த அவாவுடன் அவைகள் நெருப்பெரிகிற இடத்தைக்கிட்டி எரிந்துபோகாமலிருந்த அரைவாசிமீனையும் இழுத்து எடுத்துத் தங்கள் ஆருப்பசியை ஆற்றின. கப்பலிலிருந்தவர்கள் பனிக்கட்டியின்மேல் பெருமீன்துண்டங்களை எறிய தாய்க்கரடி தனியேவந்து அவைகளைப் பொறுக்கிஎடுத்துக்கொண்டுபோய் தன் குட்டிகளுக்கு முன்வைத்துப் பங்குபங்காகப் பிரித்துப் பெரும்பங்குகளைத் தன் குட்டிகளுக்குக்கொடுத்துச் சிறுப்பங்குகளைத் தான்பொசித்தது. கடைசித் துண்டை எடுத்துக்கொண்டுபோகையில் கப்பலிலிருந்தவர்கள் தங்கள் துப்பாக்கிகளை நீட்டிக் குட்டிகளிரண்டையுஞ் சுட்டுக்கொன்றார்கள். தாயையுமோ ஊறுவாகக் காயப்படச்சுட்டார்கள். தன்குட்டிகள் இறந்துபோனவிதக் கண்டு மிகுந்த பரிதாபத்துடன்தன் பட்சத்தைக் காட்டினதை ஆராகுதல்கண்டால் கண்ணீர் விடாமல் இருக்கமாட்டார்கள். மரணத்துக்கு ஏதுவான காயத்தைப் பட்டிருந்தாலும்தன் குட்டிகள் கிடக்கிற இடத்துக்கு ஊர்ந்துதான்கொண்டுபோனமீனையும் பங்குபோலப் பகிர்ந்து அவைகளின்முன்வைத்துத் தின்னாதிருப்பதைக்கண்டு தனது முன்கால்களைத் தூக்கி அவைகளின்மேல் வைத்து எழுப்பும்படி பிரயாசப்பட்டது. அழுதகுரலுடனே இது காரியத்தைச் செய்தது. அதின் இரங்கலோசையைக்கேட்டோர் மனம் கரைந்துபோகத்தக்கதாயிருந்தது. தான் தெண்டித்தும் அவைகள் போகாததைக்கண்டு சற்றுத்தூரம்போய் திரும்பிப்பார்த்து வீரிட்டழுதது. இப்படியுஞ் செய்துங் குட்டிகள் எழும்பாததைக்கண்டு மறுபடியுந் திரும்பிப்போய் அவைகளை மணந்து காயங்களை நக்கினது. இரண்டாம்முறையுஞ் சற்றுத்தூரம்போய்த் திரும்பிப்பார்த்துக் கொஞ்சநேரமாக வீரிட்டழுதது. ஆனாற் குட்டிகளோ எழும்பி அதைப் பின்செல்லாததினால் மறுபடியுந் திரும்பி அவைகள் கிடக்கிற இடத்திற்போய்த் தனது முழுக்கரிசனையையுங் காட்டி ஒன்றைமுதல் வட்டமிட்டு மறுபடி மற்றதையும் வட்டமிட்டுப் புலம்பலோசையுடன் குரலைவிட்டு எழுப்பினது. கடைசியில் தன் குட்டிகள் விறைத்துச் சீவனில்லாமற் கிடப்பதைக்கண்டு கப்பலை நோக்கித் தன் தலையை எறிட்டுத் தன் மனக்குரோதத்தைக் கொலைகாரருக்கு முறுகையாற் காட்டினது. அப்பொழுது கப்பற்காரரெல்லாரும் தங்கள் குண்டுகளை இறக்கி ஒரு முறையில் சுட்டார்கள். சுட்டவுடன் தனது குட்டிகளின் காயங்களை நக்கிக்கொண்டு அவைகளுக்கூடே விழுந்து சீவனைவிட்டது.

பிள்ளைகளே, அறிவற்ற மிருகசாதிகள் தங்கள் குட்டிகளில் வைத்திருக்கும் அன்பு எவ்வளவென்பதைப் பாருங்கள். ஆனால் அறிவுள்ள உங்கள் பெற்றோர் உங்களை எவ்வகையாய் பராமரித்தார்கள் என்பதை நீங்கள் உற்றுப்பார்ப்பீர்களாகில் அவர்களின் வயோதிபகாலத்தில் நீங்கள் செய்யவேண்டிய கைம்மாறு என்னவென்பதை உற்றுச்சிந்தியுங்கள்.

ஒரு பெரிய தேவபக்தனைச் சில பிள்ளைகள் "மொட்டைத்தலையா மொட்டைத்தலையா" என்று சொன்னவேளையில் தேவன் அவர்களை எவ்விதமாகத் தண்டித்தாரென்பதை வேதத்தில் வாசித்துப்பாருங்கள்.

## பிரார்த்தனையைப் பரிசோதித்தல்.

தோட்டவேலையில் அதி பிரியங்கொண்ட ஒரு பிள்ளை ஒருநாட் காலமே தோட்டத்துக்குப்போய் முழந்தாட்படியிட்டுக் குனிந்து நிலத்தில் ஏதோ கிண்டிக்கிளறி ஆராய்வதை ஒரு துரைச்சாணி கண்டு பிள்ளையே, என்னசெய்கிறாயென்க, நான் புதைத்த வித்து எப்படியிருக்கிறது, அது எப்படி முளைகொள்ளுகிறதென்று பார்க்கிறேன் என்று சொன்னான். துரைச்சாணியும் இரண்டொரு மணித்தியாலமாக பரதேசகுருமாரின் கிருத்தியங்களைப்பற்றி எழுதி

யபுத்தகத்தின் ஒற்றைகளைத் திருப்பித்திருப்பிப் பார்க்கிறதைப் பொடியன் கண்டு, அம்மாவே, நீர் என்னசெய்கிறீரென்றான்? அதற்குத் துரைச்சாணியும் பொடியனுடைய பாஷையாக நான் செலுத்திய பிரார்த்தனை எப்படியிருக்கிறது, அது எப்படி முளைகொள்ளுகிறதென்று பார்க்கிறேனென்றுசொல்ல; பொடியனும் அம்மாவே உமது பிரார்த்தனை எப்படியென்று பார்க்கிறீரா? அது எனக்கு விளங்கவில்லை என்று சொன்னான். அதற்குத் துரைச்சாணி தேவன் எனது பிரார்த்தனைக்கு மாறுத்தரம் அருளினாரா என்றுபார்க்கிறேன் எனச் சொன்னாள்.

பிள்ளைகளே, நீங்கள் அஞ்ஞானிகளுக்காகப்பண்ணியபிரார்த்தனைகள் எப்படிமுற்றுகிறதென்றுபரிசோதித்தீர்களா? அப்படியில்லாதிருக்கில் இப்பொழுதே உங்கள் பிரார்த்தனைகளை ஆராயுங்கள்.

## அபிநயசாலையிற் பிரசங்கம்.

மிகவுங் கடினப்பட்ட பாவியையும் தேவாவியினருளால் வேதபோதகர்பண்ணும் பிரசங்கம் மனந்திரும்புதலுக்குக் கொண்டுவருமென்பதைப் பின்வருஞ் சரித்திரங் காட்டுகின்றது. வீடுகளைக் கன்னமிட்டுத் திருடும் திருடன் ஒரு ஒய்வுநாடந்திநேரத்தில் தனது கூட்டத்தாரைச்சேர்ந்து அவர்களுடன் முன்யோசித்த வீட்டை இடித்துக் கன்னமெடுக்கும்படி போகையில் விக்தோரியா என்னும் அபிநயசாலை திறந்திருப்பதைக்கண்டு அதற்குட்பிரவேசித்து அவ்விடத்திலுள்ள ஒரு உத்தம போதகரால் "பாவிகளை இரட்சிக்கும்படி கிறிஸ்துயேசு உலகத்தில்வந்தார்" என்றும் பாவிகளிற் பிரதான பாவிகளும் அவரை விசுவாசித்தால் அவர்களை இரட்சிப்பதற்கு முற்றும் வல்லவரும் மனமுள்ளவருமா யிருக்கிறாரென்பதின் தாற்பரியத்தைக்கேட்டு மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினான். தன்னைப்போலொத்த பெரும்பாவிகளைக் கிறிஸ்து இரட்சிக்க மனமாயிருக்கிறாரென்பதை அவன் முன் ஒருபொழுதும் நம்பவில்லை. இப்பிரசங்கங் கேட்டவுடன தன் கூட்டத்தாருடன் சேரவிரும்பாமல் தன் வீட்டுக்குத் திரும்பிப்போய் மறுநாள் தனது கன்னக்கோல்களை எடுத்துக்கொண்டு குருவானவரிடம்வந்து தான் எவ்வகைப்பட்டவனென்றும் சென்ற இராத்திரிக்கேட்ட பிரசங்கம் தன்மனதை எவ்வகையாக்கிற்றென்றும், தான் தேவ ஒத்தாசையைக் கொண்டு தன் பாவங்களைவிட்டு ஒய்ந்திருக்கிறதற்குத் தீர்மானித்திருக்கிறதென்றும் தனக்குப்புத்திசொல்லி உதவிசெய்ய வேண்டுமென்றுஞ் சொல்லி, கன்னக்கோல்களை அவரிடங்கொடுத்தான். இதுகாரியத்தைக் குருவானவர் ஒஸ்திரேலியா (Australia) வுக்குப்போகும் துரைமகனொருவருக்குச் சொல்ல, அவர் இவனைத் தனது வேலைக்காரனாக்கினார். அவன் போகிறதற்குமுன் யேசுக்கிறிஸ்துவுக்குள் புதுச்சிருட்டியாகி தன்னைப்போலொத்த கொடும்பாவிகளும் பரிசுத்தாவியினால் மனந்திரும்ப வேண்டுமென்ற எண்ணங்கொண்டு சில வேதபுத்தகங்களை விலைக்கு வாங்கினான்.

---

அருமையான பிள்ளைகளே,

இற்றைக்கு ஏறக்குறைய ௨,௬௧௩ வருஷங்களின்முன் ஒரு பெரிய இராசனிருந்தார். அவர் அரசாளத் துவங்கினபோது ௨௫ வயசு. இந்த இராசா தான் அரசாளத் துவங்கினவுடனேதானே அனேகவருஷங்களாக யூதர் இஸ்ரவேலர் என்னும் இருகோத்திரத்தாராலும் அசட்டைபண்ணப்பட்டதும், பழுதுபோனதுமான சலோமோனாற் கட்டப்பட்ட தேவனுடைய ஆலயத்தைப் புதுப்பித்தார். தங்கள் ஊழியத்தில் கவலையீனமாயிருந்த லேவியர், ஆசாரியர் முதலானவர்களை ஏவித் தங்கள் ஊழியத்தை நடப்பிக்கும்படி செய்தார். இன்னும் இஸ்ரவேலருக்குள்ளிருந்த விக்கிரகங்களைத் தகர்த்து உயர்ந்த ஸ்தானங்களை அகற்றி அவுரிவிருட்சங்களைத் தறித்தார். இதுவன்றி ஏறக்குறைய ௭00 வருஷக்காலங்களாக இஸ்ரவேலர்வைத்துத் தூபங்காட்டி வணங்கிவந்த வனத்தில் மோசேயினாற் செய்யப்பட்ட வெண்கலச்சர்ப்பத்தையும் உடைத்துப்போட்டார். இப்படியே இஸ்ரவேலருக்குள்ளிருந்த சகலபாவங்களையும் அகற்றிவிட்டபின், சலோமோனின்காலம்முதல் இஸ்கியாவின் காலம்வரைக்கும் ஒருவராலுங் கொண்டாடப்படாதவிதமாய்ப் பெரிய ஒரு பஸ்கா கொண்டாடப்பட்டது. (௨. நாளா. ௩0: ௨௧.) இஸ்கியா இவ்விதமாய் எல்லாம்நடத்திவந்தகாலத்தில், பின்னைகளாலே அவருக்கு ஒருபெரிய சஞ்சலம் நேரிட்டது. பாருங்கள், சஞ்சலம், உபத்திரவம், இக்கண் இவைகள் இராசாவுக்கும் அஞ்சி அகற்கமாட்டா. அது எப்பேர்ப்பட்ட ஏழைக்கும் ஆசனத்திலிருந்து செங்கோலோச்சும் இராசாவுக்கும்பங்கானது. இஸ்கியா இராசா இவ்விதமே வாழ்வடைந்திருக்குங்காலத்தில் அசீரிய இராசாவாகிய சனகரிப் படைநடத்திவந்து யூதாதேசத்து அரணான பட்டினங்களிற் பிரவேசித்துப் பாளயமிறங்கியிருந்தான். அப்பொழுது இஸ்கியா தனது சனங்களைப்பார்த்து நீங்கள் பயப்படவும் கலங்கவும்வேண்டாம், அசீரியா இராசனோடு மாமிசபுயமிருக்கின்றது. நமக்குத்துணைநின்று யுத்தஞ்செய்யத் தேவனாகிய யெகோவா நம்முடனிருக்கிறாரென்று சொல்லி ஆறுதற்படுத்தினார். ஆனால் அசீரிய இராசனோ மேலும்மேலும் இஸ்கியாவையுஞ் சனங்களையுங் கலங்கப்பண்ணினதுமன்றி, தேவதூஷணம்பேசி நிந்தனையான ஒருகாகிதமுமெழுதி அனுப்பினான். பிள்ளைகளே, அப்போ இஸ்கியா என்னசெய்தாரென்று நினைக்கிறீர்கள். அந்தக் காகிதத்தைக் கண்டவுடனே பிரதி நிந்தனை செய்தாரோ தூஷணித்தாரோ, இல்லை இல்லை. பின்னை என்னசெய்தார். அக்காலத்திலொரு நல்ல தீர்க்கதரிசி அவர்களுக்குள் இருந்தார். இஸ்கியா இராசா அந்தக்காகிதத்தைக் குறித்தும்



சனகரிப் தன்னை நிந்தைபண்ணின காரியத்தைக் குறித்தும் ஏசாயாவுக்கு சொல்லியனுப்பி மறுபடி அந்தக் காகிதத்தை எடுத்துக்கொண்டு தேவனுடைய ஆலயத்துட் பிரவேசித்தார். பிரவேசித்து நீங்கள் இந்தப் படத்திற்காண்கிறபடி யெகோவாவின் சந்நிதியில் அதை விரித்துத் தேவனை நோக்கிப் பிரார்த்தித்தார். (௨ இரா. ௧௯: ௧௪—௧௯.) எடுத்து வாசித்துப்பாருங்கள். இஸ்கியாவின் பிரார்த்தனைக்கு உடனே மறுமொழிகிடைத்தது. அன்றிரவில் தேவன் தமது தூதனை அனுப்பி அசீரியரின் பாளயத்தில் ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் சனங்களைக் கொல்லுவித்தார். உடனே சனகரிப் புறப்பட்டுத் தன் தேசத்துக்குப் போய் அங்கிருக்கையில் ஒருநாள் தன் தேவனாகிய நிஸ்ரோக்கின் ஆலயத்தில் பூசைசெய்துகொண்டிருக்கையில் தன் புத்திரரால் கொல்லப்பட்டான். பிள்ளைகளே தேவனைத் தூஷணித்தவனும் தேவபத்தனை நிந்தித்தவனுமாகிய சனகரிப்புக்குச் சம்பவித்ததைக் கேட்டீர்களே. இது உங்களுக்கு ஓர் படிப்பினை. நல்லது இஸ்கியாவுக்கு என்ன சம்பவித்ததென்று பார்ப்போம். இஸ்கியா மரணத்துக்கு ஏதுவான வருத்தமாயிருந்தார். நீ இறந்துபோவாய் இனிச்சீவிக்கமாட்டாய். உன் வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தென்று தேவன் முன் சொல்லப்பட்ட தீர்க்கதரிசியைக்கொண்டு சொல்லுவித்தார். உடனே இஸ்கியா தேவனை நோக்கிப் பிரார்த்திக்க அவருடைய காலம் ௧௫ வருஷத்துக்குக் கூட்டப்பட்டது. மறுபடி பாபேலின் இராசாவுடையதூதர் இஸ்கியாவைச் சந்திக்கவந்தபோது அவன் தனது பண்டசாலையிலுள்ளவைகளையும் தன் ஆயுதசாலையிலுள்ளவைகளையும் தன் பொக்கிஷங்களிலுள்ளவைகளையுங் காண்பித்தான். ஏசாயா தீர்க்கதரிசி அவனைக் கடிந்துகொண்டு சகலமும் பாபேலுக்குக் கொண்டுபோகப்படுங்காலம் வரும். ஒன்றும் மிஞ்சாது என்று யெகோவா சொல்லுகிறாரென்றான். இன்னும் அவனொரு குளமுஞ் சாலகமும் வெட்டுவித்து நகரத்துக்கு நீரை வருத்துவித்தான்.

பிள்ளைகளே, இதினால் நீங்கள் கற்றுக்கொள்வதென்ன நீதிமான்உண்மையாய்ப்பண்ணும் விண்ணப்பம் கேட்கப்படும். செபமானது உண்மையான ஒருதிறவுகோல். நீங்கள் உண்மையுடன் பிரார்த்திக்கும் எந்தப் பிரார்த்தனையும் தேவசமுகத்தில் உங்களுக்காக நியாயதுரந்தரராகவிருக்கும் யேசுக்கிறிஸ்துவினால் சுகந்தமுமாய் அங்கிகரிக்கப்படும். ஆகையால் விசுவாசத்துடன் பிரார்த்தியுங்கள். உங்களுக்கு நல்ல இருதயத்தைத் தரும்படி பிரார்த்தியுங்கள் உங்கள் குணப்படாத பெற்றோர்சகோதர சகோதரிகள் இனத்தார் சனத்தாரின் குணப்படுதலுக்காய் வேண்டுமையுடன் பிரார்த்தியுங்கள். ஆ! நீங்கள் சிறுபிள்ளைகளென்றும் உங்கள் பிரார்த்தனையைத் தேவன்கேளாரென்றுமெண்ணாதிருங்கள். பிள்ளைகளே கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக்கொடுக்கப்படுமென்றவர் உலகத்திலிருக்கையில் சிறுபிள்ளைகளை அழைத்து அன்பாயணைத்து ஆசீர்வதித்தாரே. பிள்ளைகளே, அவர் உங்கள்பிரார்த்தனையை அங்கிகரிப்பார். விசுவாசத்துடனேகேளுங்கள். அப்பொழுது உங்களுக்கு அருளவேண்டியவைகளை அன்புடனீவார். கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்பதுபொய்யாகாது.

## சத்தியவேதக்கேள்வி.

அம் பாடம்.

௰. சில பிணியாளிகள்மேல் ஒரு தேவபத்தனினது நிழல்படும்படியாகப் படுக்கைகளிலுங் கட்டில்களிலுங் கிடத்தினார்கள். ஏன் அப்படிச்செய்தார்கள்? அந்தத் தேவபத்தனார்? அப். ௫: ௰௫.

௰௧. நாங்களும் யாதொரு நிழலில் நம்பிக்கை வைக்கும்படி வேதம் போதிக்கின்றதா? சங். ௧௭: ௮; ௩௬: ௭; ௫௭: ௧; ௯௧: ௪.

௰௨. யேசுவானவர் தமது அப்போஸ்தலர்சருப்பங்களைப் பிடிக்கும்படி தத்துவம் அருளினார். அப்படி ஆராகுதல் செய்தார்களா? மாற். ௰௬: ௰௮; அப். ௨௮: ௩—௬.

௰௩. பிணியாளிகளுக்குச் சுகமருளும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்ததார்? அப்படி அவர்கள் செய்தார்களா? அப். ௩: ௧—௮; ௫: ௰௨—௰௬, ௯: ௩௨—௪௰; ௰௪: ௮—௰; ௰௯: ௰௧—௰௨; ௨௮: ௮.

௰௪. கிலௌதிய கைசரின்நாட்களில் பஞ்சம்வருமென்று தீர்க்கதரிசனஞ் சொன்னவனார்? அப். ௰௧: ௨௮.

௰௫. மகா ஆசாரியனொருவன் ஆரை வாயில் அடிக்கச்சொன்னான்? அப். ௨௩: ௨.

## பஞ்சமாபாதக தருப்பணம்.

ஆகாயத்திலுதிக்குங்குமுதல்போலொழிபொருந்திய அலைகளையுடைய கடலிற் சனிக்கும் அழகிய முத்தம்போன்ற மேகமானது கைப்பாகிய நீரை அருந்தி யெப்பாலும் பரவித் துப்பாகப் பொழியச்செய்யுங் தயாளகுணமுன்ன பகவானருள்தங்கிய பாலியருக்குச் சுபமுண்டாவதாக.

ஓ! பாலியரே.

இப்பிரபஞ்சத்தின்கண் நாகரீகம்பொருந்திய பல பாஷைகளில் திராவிடமொன்றல்லவோ அதில் "பஞ்சமாபாதகம்" என்றொரு பருபதம் வழங்கிவருவதை அறிந்திருப்பீர்களல்லவோ அப்பதத்தின் கருத்தியாது? அதனால் வரும் கயகட்டமென்ன? இதை யெப்போதாயினுஞ் சிந்தித்ததுண்டோ? ஒருகாற் சிந்தித்திருந்தபோதிலும் பிறரின் அபிப்பிராயத்தையுமூடாடுவது சிலாக்கியமல்லவோ? ஆகையாலெனதனுபவத்தை முன்னிட்டு அதன் பலாபலங்களை "குன்றக்கூறன் மிகைபடக்கூறல்" என்றதைச் சிந்தையிற்கொண்டு கூறுவதைச் சற்றுக் கவனித்து அதன்றுறைச் செல்ல மிக வேண்டுகிறேன். அஃதாவது.

பஞ்சமாபாதகமென்பது ஐந்து கொடிதான பாதகம். அவையாவன, கொடுசிந்தை, கோபம், பொருமை, வஞ்சகம், துற்புத்தி, என்று சிலர் கூறுவர். சிலரோ, கள்ளருந்தல், பொய், களவு, குருநிந்தை, கொலை எனக் கூறுவர். இவ்விருகருத்தில் ஈறுகச் சொன்னதைச் சார்ந்துகூறுவோம்.

௧. கள்ளருந்தல்.

கட்டளைக்கலித்துறை.

கண்ணுக்குக்காந்தங் கனமானகாற்றங்கடையிலாத
உண்ணுக்குமிக்க வுரையானதாரினுறவு விட்டு
மண்ணுக்குச்சேர்க்குமரிபோலபாரில் மதுகுடியை
என்னுக்குள்வையாயிறையோனே யெங்கு மிருப்பவனே.

நேரிசைவெண்பா.

பாலும்பழமும் பலகாரம்பானிதமும்
சேலுங்கறியின் சுவைவெறுத்து—ஆலமுள
ஆம்பிரக்கள்ளருந்தல் ஆதியேயென்னிடஞ்
சாம்பரளவுவையாதீர்.

என்றதுபோல மா, பலா, கரும்பு, முதலான மதுரமான வஸ்துகளிலூறுந் தேன்களை வெறுத்து அழகிய மலர்களிலூறுந் தேனையுண்டு யாழ், வீணை, குழல், மகுடி, சிலம்பு, சல்லரி, மல்லரி, கின்னரி முதலாகிய கருவியாலுண்டுபடும் ஒலிகள் வெட்கியொளிக்கும்படியாகவிசைக்குந் திறமைபொருந்திய வண்டானது மதிமயங்கி சடரை மலரென்றணுகி மடிவதுபோல, இப்பிரபஞ்சத்தின்கண் பஞ்ச கிருத்தியங்களை நடத்தும் அருணவேசனால் உண்டுபட்ட தோற்றங்களில், மக்கள் மிக்க மேலான பகுத்தறிவைப் பொருந்திய சன்மமாக இருந்து ஐயோ! மோசம்போகிறார்கள். எவ்வாறெனில்.

பால், பழம், பலகாரம்முதலான மதுரம்பொருந்திய ஊண்பண்டங்களைக் கடவுள் அன்பாய் நமக்களித்திருக்க அதைப் பொசித்து மகிழ்வடையாமல் இகபர சிலாக்கியத்தை இழந்துவிடும்படிக்குதவிசெய்யும், பனைகள், தென்னைகள், ஈச்சுகள், "சீப்பாக்கள்," "பிராந்தி," சின், "சம்சு" முதற் கொடியதாகிய சுராபானங்களைக் குடித்து வெறிகொள்ளுந் துட்டர்களின் சகவாசத்தால் முதல்முதல் பாகன் சதிசுவைஆராய்வதுபோல கொஞ்சமாயுட்கொள்ளுகிறார்கள். அது யாதொரு தீங்கை ஆரம்பத்தில் விளைவிக்காமல் மகிழ்வையுங் களிப்பையுமீவதைக் கண்டு மகிழ்வடைந்து மேலும் மேலும் உட்கொள்ளுகிறார்கள். ஐயோ! தெய்வமே இவ்வாறு உட்கொள்ளுவதினால் உண்டுபடும் நட்டத்தை விளம்புகிறேன். சற்றுக் கவனிப்பது உங்கள் பாரம்.

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சராங்கோங்ரோட்டாளுகிய பாலியர் பிரியன்.

(இன்னும்வரும்.)

## புத்தி.

விருத்தம்.

சுடர்தனைக்கண்டுமாயுஞ் சுரும்புபோன்மதி மயங்கித்
தொடர்தனையணியுமங்கைத்தோடனையூர்ந்து மிக்க
இடர்தனைக்கொண்டுகொளுமிருப்பதேன் கவலைபோக்கி
அடர்தனைக்கொண்டோன்றனை யகத்தினிற் கொள்வாய்நெஞ்சே.

பதம். இராகம், கமாசு. தாளமாதி.

பல்லவி.

என்மதிகெடுகிறாய் சிதமனமே உயர்
*அச்சுதனடிதனைப்பட்சமாய்ப்பணியாமல்

அநுபல்லவி.

தேன்மொழி மாதர்களி னூன்மிதிலாசைக்கொண்டு ரீரீரீ
மான்பானவாவிவீண்பாலமைக்கநீ என்

சரணங்கள்.

†சுராபான்வெறியாலறமதைத்தவிர்க்கலாமோ? ஆமோ? சூதுசெய்துபிறர் பொருள்தனைக் கைக்கொள்ளலாமோ? கருவமிகக்கொண்டு கற்றவரென்மேல் ரீரீரீரீ காசினிலில்லையெனப் பேசித்திரிந்துநீ என், ௧.

மட்டிப்பசுகளுடனிஷ்டஞ்செய்வது †நீதியோ? மதியோ? மாதாபிதாவுரைத் திகெனலாமோ ஐ யையோ? வட்டிமேலாசைக்கொண்டு பெட்டிப்பணங்களை ரீரீரீரீ கொட்டிக்கொடுத்துவழி கட்டிமதிரித்து நீ என். ௨.

புறமிககூறுவதுங் குருதனைத் தூறுவது மறமோ? உரமோ? பொய்கள்பேசிமிக வைதுதிரிவது சிரமோ ஓ? மறமிகக்கொண்டு வதைகளைச்செய்து ரீரீரீரீ மாயகரகினிற் பேய்போலலைந்து நீ. என். ௩.

* அச்சுதன் அழியாதவன்.

† கன்னூல் கடுகி குத்திரப்படி குறுகல்விகாரம்.

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சராங்கோங்ரோட்டாளுகிய பாலியர்பிரியன்.

## சாத்திரஞ்சோல்லுதல்.

ஓர்சாத்திரி அல்லது சோசியக்காரன் ஒருகிறிஸ்தவனைச் சந்தித்து அவனுக்கு இன்னின்ன வழியால் நயம்வருகுதென்றும், கட்டம்வருகுதென்றும், மாறிமாறி உத்தியோகத்தைப்பற்றியும், சரீரசுகத்தைப்பற்றியும், வெற்றிதோல்வியைப்பற்றியும், நெடுகச் சொல்லிக்கொண்டு வந்தான். கிறிஸ்தவன் கவனித்துக்கேட்டதின்பின், சாத்திரியாரே, எல்லாஞ் சொன்னீர் சரியென்றுவைத்துக்கொள்ளுவோம், நல்லது நான் உமக்கு இப்போ ஏதாவது தருவேனா? தரமாட்டேனா? தருகில் என்னதருவேன்? இதைமாத்திரஞ் சொல்லும் என்றான். உடனே சாத்திரியார் விழித்துக்கொண்டு, ஐயா, இதுவெல்லாம் பிழைக்கிறதற்கெடுத்த வேஷம் என்றுசொல்லித் தலைகவிழ்ந்தவனாய் நின்று ஏதுங் கிடைக்குமோ என்றுபார்த்து, கிறிஸ்தவன் கொடாததைக் கண்டு, ஐயா, நீர்நல்ல ஆசாமி, தட்டாதெருவில் வசிமாற வந்தேனேயென்று சொல்லிப்போய் விட்டான்.

## குடியாசை பேராசை.

ஒருமுறை ஒரு ஐறிஷ் மனுஷன் மருந்துவிற்குஞ் சாய்ப்புக்குள் புகுந்து சாராயம் நிறைந்த ஒரு குப்பியைத் தனது சட்டைச்சாக்குக்குளிருந்தெடுத்து ஒரு வைத்தியரிடம் நீட்டி, ஐயா இதைப்பிடியும், திறந்துமணவும் என்றான். உடனே அவர்திறந்து மணந்து கலப்பில்லாத நல்லசரக்கென்றார். அதற்கு ஐறிஷ் மனுஷன் மெத்தஉபகாரம், மறுபடி தயவுசெய்து அதை எனக்கு நீட்டுமென்றான். அப்படி அவன் கேள்விப்படி நீட்டிக், காரியம் என்னவென்றார். கெட்டி, எனது குருவானவர் சொன்னது, நீ குடிக்கவேண்டில் வைத்தியர் உனக்குத் தந்தாலன்றிக் குடியாதே என்றார். அதனால் திரும்ப எனக்குக் கொடுமென்றேன்.

## தேவனைக்காண விரும்புதல்.

திரேசான் என்னும் இராயன் ஒரு யூதபோதகனை நோக்கி உம்முடைய தேவன் எங்கும் வியாபித்திருக்கிறாரென்று போதிக்கிறீரே, நான் அவரைக்காண ஆசைப்படுகிறேனென்று சொல்ல, அதற்கு யூதன் தேவன் எங்கும் வியாபித்திருப்பது மெய்தான். ஆயினும் நமது ஊனக்கண்ணுக்குத்தோற்றப்படுகிறவரல்ல, அவருடைய மகிமையை எவனும்பார்க்க முடியாதென்றார். ஆனால் இராயன் எவ்விதத்திலும் அவரைக் காண வேண்டுமென்று வற்புறுத்த, யூதன் இராயரே, அவரைக் காண்பதற்குமுன் அவருடைய ஊழியக்காரர்களிலொருவனை நீர் காணச் சம்மதிப்பீராவென்று கேட்க, இராயன் ஆம் என்று சம்மதித்தார்.

அப்பொழுது யூதன் இராயனை உச்சிமத்தியானவெளியில் வெளியே அழைத்து சூரியனை நோக்கிப் பார்க்கச்சொன்னார். அதற்கு அவர் பார்க்கக் கூடவில்லை, கண் கூசுகிறதென்றார். யூதன் இராயரே, சிருட்டியாகிய சூரியனின் ஒளியைக் காணக்கூடாத நீர் சிருட்டிகராகிய தேவனுடைய மகிமையை காணவிரும்புவதெப்படி. அப்படி நீர் கண்டால் உடனே மரிப்பீரென்றான்.

## ஓர் உணர்ச்சியுள்ள் கேள்வி.

ஒருநாள் ஒரு பிள்ளை தன் மாதாவை நோக்கி, மாதாவே எனது உவாத்தியார் இவ்வுலகத்தில் நாமிருப்பது சொற்பகாலமென்றும் இதிலிருக்கும்பொழுது மறுமைக்கு நாம் ஆயித்தம்பண்ணவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார். ஆனால் மறுமைக்கு ஒருவரும் ஆயத்தம்பண்ணுவதை நான் காணவில்லை. நீயும் உன வெந்துக்களிடம் போகும்படி ஆயித்தம்பண்ணுகிறாய். உனது சுற்றத்தாரும் இங்கே வரும்படி ஆயித்தம்பண்ணுகிறார்கள். ஏன் ஒருதரும் மறுமைக்கு ஆயத்தம்பண்ணவில்லை? ஏன் அதற்கு முயற்சிசெய்யாமலிருக்கிறார்கள்?

பிள்ளைகளே இக்கேள்வியை உங்கள் மனதிலுறுத்திக் கேளுங்கள். நித்தியமும் நாம் வசிக்கவேண்டிய வீட்டுக்கு ஆயத்தம்பண்ணாமலிருப்பது எவ்வளவு புத்தியீனம்.

கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளும் சத்தியவேதத்தில் ௬௬ பகுதியான புத்தகங்களுண்டு. இப்புத்தகங்களில் ௲௱௮௯ அதிகாரங்களும் ௩௱௬ ௲ வசனங்களுமுண்டு.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.